Puducherry / Regional Bulletin / Tamil / 18.10hrs / 29-9-2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி : 29-09-2026 – செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள் :

முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை எட்டுவதில், இந்திய கடற்படையின் ஆதரவு, முக்கியமானதாக இருக்கும் என்று, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

தொலை நோக்கு பார்வையுடன் கூடிய, ஆயுஷ்மான் பாரத் – பிரதமரின் ஜன் ஆரோக்யா திட்டத்தினால், நாட்டின் சுகாதாரத் துறையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

உலகின் 3ஆவது மிகப் பெரிய விமான போக்குவரத்து சந்தையாக இந்தியாவை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப் படுவதாக, மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

புதுச்சேரி கலை பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு. ராஜவேலு, இன்று, அரசு அருங்காட்சியகத்திலும், ரோமண்ட் ரோலண்ட் நூலகத்திலும் நேரடி ஆய்வு மேற்கொண்டார்.

ராஜ்நாத் (14)

2047ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை எட்டுவதில், இந்திய கடற்படையின் ஆதரவு, முக்கியமானதாக இருக்கும் என்று, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், இந்திய கப்பல் படை கமாண்டர்கள் மாநாட்டில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். புவி–அரசியல் பிரச்சனைகள், மற்றும், நவீன தொழில்நுட்பங்களால், பாதுகாப்புத் துறையில் பல புதிய சவால்கள் உருவாகி வருவதால், இந்தியாவின் பாதுகாப்பு தயார் நிலையை வலுப்படுத்துவதில், இத்தகைய சவால்களுக்கும் ஒருங்கிணைந்த இடமளித்தல் அவசியம் என்றும், பாதுகாப்பு அமைச்சர் வலியுறுத்தினார். இந்திய கடற்படையை முழு ஆயத்த நிலையுடன் கூடிய, நம்பகமான, எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ற பாதுகாப்பு சக்தியாக பராமரிப்பது குறித்தும், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழில்நுட்பங்களை இதற்கு பயன்படுத்திக் கொள்வது குறித்தும், கடற்படை கமாண்டர்கள் மாநாட்டில், விவாதிக்கப்படுகிறது.

ஊடக மாநாடு (13)

உலகம் தற்போது சமூக ரீதியிலும், தொழில்நுட்ப ரீதியிலும் பெரும் மாற்றங்களை சந்தித்து வரும் நிலையில், ஊடகங்களுக்கான உள்ளடக்க ஆதாரங்களுக்கு பஞ்சமே இல்லை என்றாலும், ஊடகங்கள் மக்களுக்கு தாங்கள் வழங்கும் தகவல்களில், நம்பகத் தன்மை மற்றும் மானுடத் தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்ளுதல் அவசியம் என்று, மத்திய சுற்றுலா மற்றும் கலாச்சாரத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார். இன்று மும்பையில், ஃபிக்கி – ஃபிரேம்ஸ் ஊடக மாநாட்டின் தொடக்க விழாவில் உரையாற்றிய அவர், மனிதர்களுக்கு இடையிலும் – சமூகங்களுக்கு இடையிலும், பரஸ்பர புரிந்துணர்வை மேம்படுத்துவதே ஊடகங்களின் முக்கிய கடமை என்றார். இந்தியாவின் ஊடக மற்றும் பொழுதுபோக்கு சூழலில் உருவாகி வரும் மாற்றங்கள் குறித்த இந்த 2 நாள் மாநாட்டில், திரைப்படம், தொலைக்காட்சி, கேமிங்,

ஸ்ட்ரீமிங் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

சேவா சங்கல்ப் – 1 (13)

மக்கள் சேவை மூலமான தேச சேவை என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் சேவைப் பயணம், இன்று வரை அயராத உறுதிப்பாட்டுடன் தொடர்கிறது. சேவை மற்றும் நல்லாட்சி என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை நோக்கி, நாடு தொடர்ச்சியாக பயணித்து வருகிறது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி-அனைவருக்கும் சமூக அதிகாரம் என்னும் அரசின் கொள்கையினால், நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலை நோக்கு பார்வையினால், நாட்டின் சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து, இன்று, சேவா சங்கல்ப் அபியான் என்னும் இந்த சிறப்பு தொடரில் காண்போம்............

(வாய்ஸ்)

சேவா சங்கல்ப் – 2 (18)

(வாய்ஸ்)

நாட்டின் சுகாதாரத் துறையை மேம்படுத்தும் நோக்குடன், 2018ஆம் ஆண்டு தொடக்கப்பட்ட, ஆயுஷ்மான் பாரத் – பிரதமரின் ஜன் ஆரோக்யா திட்டம், மருத்துவ சேவைக்கும் - வறுமைக்கும் இடையிலான சமன்பாட்டையே மாற்றி அமைத்துள்ளது. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ், ஏழை குடும்பங்களுக்கு ஆண்டுக்கு தலா 5 லட்சம் ரூபாய் வரை, மருத்துவ காப்பீடு வழங்கப்படுவதால், ஏழைகள் தீவிர நோயால் பாதிக்கப்பட்டால், மருத்துவ சிகிச்சை அல்லது பொருளாதார சீர்கேடு ஆகிய இரண்டில் ஒன்றை மட்டுமே தேர்ந்தெடுக்க முடியும் என்ற நிலை தற்போது மாறியுள்ளது. இதுவரை நாட்டின் 40 சதவிகித ஏழை குடும்பங்கள், படிப்படியான முறையில் இத்திட்டத்தின் கீழ் கொண்டு

வரப்பட்டுள்ளன. இவ்வாண்டு ஜூன் மாதம் வரை, இத்திட்டத்தின் கீழ், 12.69 கோடி நோயாளிகள், 37 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டு, 1.92 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான உயர் மருத்துவ சிகிச்சைகளை, இலவசமாகப் பெற்றுள்ளனர். 70 வயதிற்கும் மேற்பட்டவர்கள் சமூகப் பொருளாதார ரீதியில், எந்த நிலையில் இருந்தாலும், பிரதமரின் ஜன் ஆரோக்யா திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதால், நாட்டில், நாலரை கோடி குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 6 கோடி முதியவர்களும் இத்திட்டத்தினால் பயன் பெற்று வருகின்றனர்.

சேவா சங்கல்ப் – 3 (9)

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தினால் பெண்களிடையே பெருமளவில் தாக்கம் ஏற்பட்டுள்ளது. நாட்டில் ஆயுஷ்மான் அட்டை வைத்துள்ள பயனாளிகளில் 49 சதவிகிதம் பேரும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நோயாளிகளில் 48 சதவிகிதம் பேரும், பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. மருத்துவ சிகிச்சை என்றாலே தவிர்க்கப்பட வேண்டிய செலவு என்ற எண்ணத்தை மாற்றி, தரமான சிகிச்சை வசதிகளே, ஆரோக்கியமான வாழ்க்கையின் அடிப்படை என்பதை உறுதிப்படுத்துவதில், ஆயுஷ்மான் பாரத் – பிரதமரின் ஜன் ஆரோக்யா திட்டம் முக்கிய பங்காற்றி இருப்பதில் ஐயமில்லை.

பழங்குடியினர் (8)

இந்தியாவின் பழங்குடி கலாச்சார மரபுகளை டிஜிட்டல் ஆவணமாக்கி, பேணிப் பராமரிப்பது குறித்து, மத்திய பழங்குடியினர் விவகாரங்கள் துறை அமைச்சகம், டெல்லியில் உள்ள இந்திராகாந்தி தேசிய கலை மையத்துடன், உடன்பாடு செய்து கொண்டுள்ளது. அமைச்சகத்தின் கீழ் செயல்படும், பழங்குடி ஆராய்ச்சி அமைப்புகளை, இந்திரா காந்தி தேசிய கலை மையத்தின் கல்வி ஆராய்ச்சி மற்றும் ஆவணக் காப்புத் திறன்களுடன் ஒருங்கிணைக்கவும் இதனால் ஏதுவாகும் என்று அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விமானப் போக்குவரத்து -1 (8)

இந்தியாவை, உலகின் 3ஆவது மிகப் பெரிய விமான போக்குவரத்து சந்தையாக மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக, மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார். அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெற உள்ள ரூட்ஸ் ஆசியா மாநாட்டிற்கான முன்னோட்டமாக, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் பேசுகையில், இந்தியா தற்போது உலகின் முக்கியமான விமானப் போக்குவரத்து கேந்திரங்களில் ஒன்றாக திகழ்வதாக கூறினார். அமைச்சரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்...

(வாய்ஸ்)

விமானப் போக்குவரத்து - 2 (11)

(வாய்ஸ்)

இந்தியாவில், பிராந்திய விமான போக்குவரத்து இணைப்புகளுக்கான உடான் திட்டத்தினால், விமான நிலையங்களின் எண்ணிக்கை 166ஆக அதிகரித்து, விமானப் பயணம் எளிதாகி இருப்பதாக, அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறினார். தற்போது ஆண்டுக்கு 24 கோடியாக உள்ள விமானப் பயணிகளின் எண்ணிக்கை, 2047ஆம் ஆண்டிற்குள், 130 கோடியாக 6 மடங்கு உயரும் என்று அவர் தெரிவித்தார். புதுடெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெற உள்ள 3 நாள் ரூட்ஸ் ஆசியா மாநாட்டில், 115 முன்னணி விமானப் போக்குவரத்து நிறுவனங்கள் பங்கேற்கும் என்றும், சுற்றுலா உள்பட சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரிடையே, 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட நேரடி சந்திப்புகள், இம்மாநாட்டின் போது நிகழும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

புதுச்சேரி – ராஜவேலு (12)

புதுச்சேரி கலை பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு. ராஜவேலு, இன்று, அரசு அருங்காட்சியகத்திலும், ரோமண்ட் ரோலண்ட் நூலகத்திலும் நேரடி ஆய்வு மேற்கொண்டார். அருங்காட்சியகத்தின் அனைத்து பகுதிகளையும் அவர் பார்வையிட்டு, பழங்காலப் பொருட்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு முறைகள் குறித்து கேட்டறிந்தார். அருங்காட்சியகத்தை பார்வையிட வந்திருந்த சுற்றுலாப் பயணிகளுடன் அவர் கலந்துரையாடி, அருங்காட்சியகத்தின் மேம்பாட்டிற்கான கருத்துகளை கேட்டறிந்தார். ரோமண்ட் ரோலண்ட் நூலகத்திலும் வாசகர்களை அவர் சந்தித்துப் பேசினார். நூலகத்தில் வாசகர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், மாணவர்களுக்கு தனி படிப்பிட வசதிகளை ஏற்படுத்தவும் அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவிட்டார். கலைப் பண்பாட்டுத்துறை இயக்குநர் திரு. சக்திவேல் உள்ளிட்டோர், இந்த ஆய்வின்போது உடனிருந்தனர்.

தோட்டக்கலை (10)

புதுச்சேரி பிராந்தியத்தைச் சேர்ந்த 20 தோட்டக் கலை விவசாயிகள், 5 நாள் கற்றல் மற்றும் அனுபவப் பயணமாக கேரளம் - கர்நாடக மாநிலங்களுக்கு அழைத்துச் செல்லப் பட்டுள்ளனர். கேரள மாநிலம் காசர்கோட்டில், மத்திய தோட்டப் பயிர் ஆராய்ச்சி கழகத்தையும், கர்நாடக மாநிலம் குடகு பகுதியில், இயற்கை வேளாண் ஆராய்ச்சி நிலையத்தையும், மைசூரில், முக்கிய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனங்களையும் இவர்கள் பார்வையிட உள்ளனர். குறிப்பாக, தென்னை, மிளகு மற்றும் இதர தோட்டக்கலை பயிர்களின் சாகுபடி முறைகள், பாசனத் தேவைகள், நோய் மேலாண்மை, மற்றும், அறுவடைக்குப் பிந்தைய தொழில் நுட்பங்களை விவசாயிகள் அறிந்து கொள்ள இதனால் ஏதுவாகும் என, தோட்டக் கலைத் துறை தெரிவித்துள்ளது.

ஜிப்மர் தூய்மை (8)

தூய்மையே சேவை இயக்கத்தின் கீழ், புதுச்சேரி ஜிப்மர் நிர்வாகம் தூய்மை, சுகாதாரம், சுற்றுச் சூழல் பராமரிப்பு, மற்றும், மக்கள் விழிப்புணர்வை மையமாகக் கொண்டு, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, அண்மையில் ஜிப்மர் வளாகத்தில் நடைபெற்ற மாணவர்களுக்கான விழிப்புணர்வு பேரணியில், கேந்திரிய வித்யாலயா பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்றனர். வரும் அக்டோபர் 1ஆம் தேதி, புதுச்சேரி ரயில் நிலையத்தில், ஜிப்மர் சார்பில் மாபெரும் தூய்மை பணிகள் நடைபெறும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

வானிலை (15)

வளிமண்டல சுழற்சி மற்றும் காற்றழுத்த தாழ்வுப் பாதை காரணமாக இன்று, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, நாமக்கல், ஈரோடு, திண்டுக்கல், மதுரை ஆகிய மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மற்றும், வேலூர், திருப்பத்தூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம், கடலூர் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், தமிழகத்தின் இதர பகுதிகள் மற்றும் காரைக்கால் பகுதியில் லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. அக்டோபர் 5ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இன்று சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள வங்கக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூரில் 9 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

ஆசிய விளையாட்டு (8)

ஜப்பானில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் மகளிர் தனிநபர் டிராப் துப்பாக்கிச் சுடுதல் பிரிவில், இந்தியாவின் நீரு தண்டா தங்கப் பதக்கம் வென்று, வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார். அணிகளுக்கு இடையிலான இதே பிரிவில், நீரு தண்டா, ஆஷிமா ஆலாவத், மனிஷா கீர் ஆகியோர் அடங்கிய இந்திய மகளிர் அணி, வெள்ளிப் பதக்கம் வென்றது. குத்துச் சண்டை போட்டிகளில், இந்தியாவின் பர்வீன் ஹூடா, அங்குஷ் பங்கல் ஆகியோர் அவரவர் எடைப் பிரிவுகளில் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

மாநிலங்களவை தேர்தல் (11)

தேர்தல் ஆணையம், 11 மாநிலங்களவை இடங்களுக்கு தேர்தல் அறிவித்துள்ளது. உத்தரப் பிரதேசத்தில் இருந்து காலியாகும் 10 இடங்களும், உத்ராகண்ட் மாநிலத்திற்கான 1 இடமும் இதில் அடங்கும். வரும் நவம்பர் 25ஆம் தேதியுடன், மாநிலங்களவையில் இருந்து ஓய்வு பெறும் உறுப்பினர்களில் திரு. ஹர்தீப் சிங் புரி, திரு. B.L. வர்மா ஆகிய மத்திய அமைச்சர்களும், சமாஜ்வாதி கட்சியைச் சேர்ந்த திரு. ராம்கோபால் யாதவ், பகுஜன் சமாஜ் கட்சியின் திரு. ராம்ஜி ஆகியோரும் அடங்குவர். இது அல்லாது, மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி ஒருவர் ராஜினாமா செய்ததால், மாநிலங்களவையில் காலியான 1 இடத்திற்கு, இடைத்தேர்தலும் அறிவிக்கப் பட்டுள்ளது. இத்தேர்தல்களுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கி உள்ளது. வாக்குப் பதிவு அக்டோபர் 16ஆம் தேதி நடைபெறும்.

மீண்டும் தலைப்புச் செய்திகள் :

முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை எட்டுவதில், இந்திய கடற்படையின் ஆதரவு, முக்கியமானதாக இருக்கும் என்று, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

தொலை நோக்கு பார்வையுடன் கூடிய, ஆயுஷ்மான் பாரத் – பிரதமரின் ஜன் ஆரோக்யா திட்டத்தினால், நாட்டின் சுகாதாரத் துறையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

உலகின் 3ஆவது மிகப் பெரிய விமான போக்குவரத்து சந்தையாக இந்தியாவை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப் படுவதாக, மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

புதுச்சேரி கலை பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு. ராஜவேலு, இன்று, அரசு அருங்காட்சியகத்திலும், ரோமண்ட் ரோலண்ட் நூலகத்திலும் நேரடி ஆய்வு மேற்கொண்டார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / KR / RK